**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,திருச்சுழி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,திருச்சுழி.

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ம் நாள் செவ்வாய்கிழமை.

இடைநிலை மனு எண்.4/2022

இன்

**அசல் வழக்கு 247/2021**

*****

(i) தமிழக அரசு அதன் பிரதிநிதியான விருதுநகர்
மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்
(ii) வருவாய் வட்டாட்சியர், திருச்சுழி
(iil) கிராம நிர்வாக அலுவலர், ஆண்டியேந்தல்

... மனுதாரர்கள்/3,4, 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1. ராஜேசேகர்
2. ராதாகிருஷ்ணன்,
(தங்களுக்காகவும், நாயனேந்தல் கிராம
பொதுமக்களின் பிரதிநிதிகள் நிலையிலும்)

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு 27.04.2022–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 29.04.2022 தேதியன்று கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 01.09.2022 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P.பாரதமணி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ராஜாதேசிங் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வாதங்களை கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்...

**உத்தரவு**

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 9 ரூல் 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல்வழக்கில் கடந்த 03.03.2022ம் தேதி மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறபிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல்.

G ABARNA Digitally signed by G ABARNA

**2.மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகளின் மனு சுருக்கம்:–**

எதிர்மனுதார்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் ஆஜராவதற்காக சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 03.03.2022 ம் தேதியில் வாய்தா ஏற்பட்டிருந்தது. மேற்படி வழக்கு சம்பந்தமாக சமூகம் நீதிமன்ற சம்மன் கைத்தவறுதலாக இதர வழக்கு கோப்புகளுடன் கலந்து விட்ட காரணத்தினால் மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகள் ஆஜராக இயலவில்லை. இதனால் அரசு வழக்கறிஞருக்கும் தகவல் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது. இதனால் மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகள் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகள் எதிராக கடந்த 03.03.2022 ம் தேதியில் எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அசல் வழக்கில் கடந்த 03.03.2022 ம் தேதியில் மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகள் எதிராக பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கின் மீதான மேல்நடவடிக்கைகளில் பங்குகொள்ள அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர்களின் மறுப்புரையின் சுருக்கம்:–**

3(1). மனு சட்டப்படி செல்லாது. அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 03.03.2022 ம் தேதி வாய்தா ஏற்பட்டு இருந்ததாகவும், வழக்கு சம்பந்தமான நீதிமன்ற சம்மன் கைத்தவறுதலாக இதர கோப்புகளுடன் கலந்துவிட்ட காரணத்தினால் வழக்கில் ஆஜர் ஆக இயவில்லை என்றும், அரசு வழக்கறிஞருக்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை என்றும், அதனால் மனுதார்கள் 03.03.2022 ம் தேதியில் ஆஜராகவில்லை என்றும், எனவே அவர்களை பொறுத்து எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ள விசயங்கள் பொய்யானவை ஆகும். எக்ஸ்பார்டி உத்தரவு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரியிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

3(2). 3 முதல் 5 பிரதிவாதிகளுக்காக அரசு வழக்கறிஞர் கடந்த 26.04.2021 ம் தேதியில் வக்காலத்து செய்து ஆஜராகி இருக்கின்றால். அதன்

G ABARNA Digitally signed by G ABARNA

பிறகு 08.06.2021, 07.07.2021, 28.07.2021, 23.08.2021, 09.09.2021, 22.09.2021, 06.10.2021, 21.10.2021, 27.10.2021, 29.11.2021, 04.12.2021, 10.12.2021, 04.01.2022, 23.02.2022, 25.02.2022 தேதிகளில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது. இதில் 22.09.2021ம் தேதி முதல் அதற்கு பிற்பாடு ஏற்பட்ட வாய்தாக்களில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இறுதி என்று தெளிவாக நீதிமன்றம் குறிப்பிட்டு இருக்கின்றது. அந்த கால கட்டங்களில் 3 முதல் 5 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. ஆர்டர் 8 ரூல் 1 சிபிசிபடி பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அதிகபட்சமாக நீதிமன்றம் 90 நாள் அவகாசம் அளிக்கலாம். அந்த காலகட்டத்திற்குள்ளும் மனுதார்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. எனவே மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

**தீர்வு காணவேண்டிய பிரச்சனை:-**

3. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு:-**

4. மனு, எதிருரை, ஆகியன பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

4(1). அசல் வழக்கில் 03.03.2022ம் தேதியன்று ஆஜரின்மைக்காக மனுதாரர்கள்/3, 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய கோரி இம்மனுவை மனுதார்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். 03.03.2022ம் தேதியன்று மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜரின்மைக்கு சமூக நீதிமன்ற சம்மன் கைத்தவறுதலாக இதர வழக்கு கோப்புகளுடன் கலந்துவிட்ட காரணத்தினால் சமூக நீதிமன்றத்தில் ஆஜராக முடியாமல் போய்விட்டது என்று மனுவில் காரணமாக கூறப்பட்டள்ளது. மனுவில் கூறப்பட்ட காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க 03.03.2022ம் தேதியன்று மனுதார்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுவை மேல்நடத்த மனுதார்கள்/3, 4, 5 பிரதிவாதிகளுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

G ABARNA Digitally signed by G ABARNA

4(2). இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் உளநிறைவடைகிறது. எனவே இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

**இறுதிமுடிவு:-**

5. இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்த உத்தரவு இல்லை.

*இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

G ABARNA Digitally signed by G ABARNA

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.